செ.வெ.எண்.23 நாள்.11.01.2018.

திருநெல்வேலி பிரான்சீஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் மாநகராட்சியின் சார்பில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

----------

திருநெல்வேலி பிரான்சீஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் மாநகராட்சியின் சார்பில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்வு பேரணி இன்று (11.01.2018) நடைபெற்றது. இப்பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து, கலந்து கொண்டார். பேரணியில் எப்எக்ஸ் பொறியியல் கல்லூரி மாணவ, மாணவிகள் 1000–த்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். கல்லூரி வளாகத்தில் துவங்கிய இப்பேரணி வண்ணார்பேட்டை செல்லபாண்டியன் சிலை வழியாக மீண்டும் கல்லூரி வளாகத்தினை சேர்ந்தது. முன்தாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், நகர்புறங்கள் தூய்மையாக உள்ளதை இந்திய அளவில் ஆண்டுதோறும் பட்டியிலிடப்படுகிறது. கடந்த ஆண்டு 500 நகரங்களில் திருநெல்வேலி 196வது நகராமாக பட்டியலில் இடம் பெற்றுள்ளது. நமது திருநெல்வேலி மாநகரம், மாவட்டம் சுத்தமாக, சுகாதாரமாக திகழ்ந்திட விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இதுபோன்று விழிப்புணர்வு பேரணிகள் நடத்தப்படுகிறது. ஸ்வச்சதா ஆப் (SWATCHHATA APP) மொபைலில் தரஇறக்கம் செய்து அதில் கூறப்பட்டுள்ள விழிப்புணர்வைகளை தெரிந்து கொள்ளலாம். மேலும், உங்களது கருத்துக்களையும் தெரிவிக்கலாம். மக்கும் மற்றும் மக்கா குப்பைகளை பிரித்து கையாளுதல் குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும். பொது இடங்களை தூய்மையாக பராமரிக்கும் விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும். “நம்ம NELLAI” மொபைல் ஆப் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தயார் செய்யப்பட்டுள்ளது. இதில், திருநெல்வேலி மாவட்டத்தின் சிறப்புகள், முக்கிய தொலைபேசி எண்கள், சுற்றுலா தளங்கள் உள்ளிட்ட பல்வேறு விவரங்களை தெரிந்து கொள்ளலாம். உங்களது புகார்களையும் பதிவு செய்யலாம். இந்த மொபைல் ஆப் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

டெங்கு காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வு தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் பொதுமக்களிடம் கொசு ஒழிப்பு பணிகளில் மெத்தன போக்கு உள்ளது. மாணவ, மாணவியர்களாகிய நீங்கள் உங்கள் பகுதி பொதுமக்களிடம் டெங்கு காய்ச்சல் குறித்தும், கொசு ஒழிப்பு குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். வீடு மற்றும் பொது இடங்களில் சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தி, தூய்மையான திருநெல்வேலியை உருவாக்கி முதல் பத்து இடங்களுக்குள் வரும் வகையில் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென பேசினார்.

கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு நம்ம நெல்லை மொபைல் ஆப் குறித்த வாழ்த்து அட்டைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளர் (பொ) திரு.நாராயணநாயர், மாநகராட்சி நகர்நல அலுவலர் மரு.பொற்செல்வன், கல்லூரி முதல்வர் திரு.இளங்கோவன் மற்றும் பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.